

வெற்றியின் இரகசியங்கள் (2) - அத்தியாயம் இரண்டு : மனத்தின் தன்மைகள் - அ . ந . கந்தசாமி -

Written by - அ.ந.கந்தசாமி -
Sunday, 25 February 2018 14:49 - Last Updated Monday, 26 February 2018 07:49

வெற்றியின்
இரகசியங்கள்
அ. ந. கந்தசாமி
அ.ந.கந்தசாமி

அ .ந .கந்தசாமி நினைவு தினம் பெப்ருவரி *14!*

- அறிஞர் அ .ந .கந்தசாமி எழுதித் தமிழகத்தில் பாரி பதிப்பக வெளியீடாக *1966*இல் வெளியான நூல் வெற்றியின் இரகசியங்கள் '. வாழ்வின் வெற்றிக்கு அறிவுரைகள் கூறும் சிறந்த தமிழ் நூல்களிலொன்று . இந்நூலில் அ .ந .க மனத்தின் தன்மைகளை , அது பற்றிய நவீன அறிவியற் கோட்பாடுகளையெல்லாம் மிகச்சிறப்பாக , துள்ளு தமிழ் நடையில் எழுதியிருக்கின்றார் . அந்த வகையில் சிறந்த உளவியல் நூலாகவும் இதனைக் கொள்ளலாம் . இந்நூல் பதிவுகள் 'இணைய இதழில் தொடராக வெளிவரும் . - பதிவுகள் -

1 / 3

வெற்றியின் இரகசியங்கள் (2) - அத்தியாயம் இரண்டு : மனத்தின் தன்மைகள் - அ.ந.கந்தசாமி -

Written by - அ.ந.கந்தசாமி -
Sunday, 25 February 2018 14:49 - Last Updated Monday, 26 February 2018 07:49

மனிதனுக்கும் இதர உயிர்களுக்கும் இருக்கும் வேற்றுமை அவனுக்குச் சிந்திக்கத் தெரிந்திருப்பதுதான் என்று கிரேக்க அறிஞன் அரிஸ்டாட்டில் சொல்லியிருக்கிறான், ஆனால் ஒக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஹம்ப்ரீஸ் போன்றவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. சிந்தனை மனிதனின் ஏகபோக உரிமையல்ல என்றும் பூனை, நாய், கொரில்லா போன்ற மிருகங்களும் சிந்திக்கவே செய்கின்றன என்றும் இவ்வறிஞர்களில் பலர் பரிசோதனைகள் மூலம் நிரூபித்திருக்கிறார்கள். இது எப்படியாயினும் ஒன்றுமட்டும் எவரும் மறுக்க முடியாது. இன்றுள்ள உலகப் பிராணிகள் யாவற்றிலும் அதிகமாகச் சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன்தான். மனிதனுக்கு அடுத்தபடி கொரில்லாக் குரங்கே அதிகமாகச் சிந்திக்கத் தெரிந்த பிராணி என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால் மனிதனின் சிந்தனைசக்திக்கும் கொரில்லாவின் சிந்தனைச்சக்திக்கும் எவ்வளவு வித்தியாசம்? ஒன்று மலை, மற்றது கடுகு, மனிதனின் சிந்தனைசக்தியின் பீடம் மனம் என அழைக்கப்படுகிறது. இந்த மனம் எங்கள் தேகத்தைக் கட்டியாள்கிறதா, அல்லது தேகம் மனத்தைக் கட்டியாள்கிறதா என்பது பற்றி மனிதன் நீண்டகாலமாக வாதித்து வருகிறான். இந்த வாதத்தில் மிகப் பெரிய தத்துவ ஞானிகள் பலர் கலந்து கொண்டிருக்கிறர்கள்.

இதில் மனமே தேகத்தைக் கட்டியாள்கிறது என்று வாதிடுவோர் இலட்சியவாதிகள் என்றும், தேகமே மனத்தைக் கட்டியாள்கிறது என்போர் உலோகாயதவாதிகள் என்றும் பலவாறாக அழைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவ்வளவு வாதத்திற்குப் பிறகும் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. இன்றும் மனம் என்பது என்ன? அது உடலில் எங்கேயிருக்கிறது? மண்டைக்குள் இருக்கும் தேங்காய்ப் பருமன் உள்ள மூளையா மனம்? அல்லது அதில் ஒரு பகுதியா? மேலும் மனம் என்ற வார்த்தைக்குள் சிந்திக்கும் சக்தி மட்டும் அடங்கவில்லையே! மனிதன் பிறந்த நாள் தொடக்கம் ஒரு பெரிய ஞாபகக் குவியலையும் தன்னுடன் சேர்த்து வைத்திருக்கிறானல்லவா? அதுவும் மனத்துள்தான் கிடக்கிறது. நாம் படிப்பது, கேட்பது, அனுபவிப்பது மனப்பாடஞ் செய்வது, எல்லாமே அங்கே புதையுண்டு, கிடக்கின்றன. இவை எல்லாம் மூளையிலுள்ள சவ்வுகளிடையேயும் நரம்புகளிடையேயுமா கிடக்கின்றன?- இது போன்ற பல கேள்விகளுக்கு போதிய பொருத்தமான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதில் இருந்து ஒன்று தெரிகிறது. உலகத்தையே துலக்கிவிட்டதாக அல்லது துலக்க முடியும் என்று கருதும் மனிதன் இன்னும் தன் உடலையும் உள்ளத்தையும் சரிவர அறிந்து கொள்ளவில்லை என்பதுதான் அது. மனிதனே! உன்னை நீ அறிந்து கொள்!-என்று பண்டைக் காலத்திலிருந்தே சொல்லப்படுகிறது. இதில் நீ என்பது என்ன? நீ, நான், தான் என்ற வார்த்தைகள் மனத்தையா தெரிவிக்கின்றன? இது முற்றாக விடுவிக்கப்படாத ஒரு புதிராகத்தான் இன்னும் இருந்து வருகிறது. இருந்தபோதிலும் “நீ நான், தான்? என்ற கருத்தில் மனிதனின் மனம்தான் பேரிடம் பெறும் என்று சிலர் கொள்வதில் ஓரளவு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. நான் அல்லது நீ என்ற வார்த்தை மனம், உடல், அவற்றை இயக்கும். சக்தி என்பவற்றின் சேர்க்கையைக் குறிக்கிறது என்று கொள்வது ஓரளவு பொருத்தமாகலாம்.

2 / 3

Written by - அ.ந.கந்தசாமி -
Sunday, 25 February 2018 14:49 - Last Updated Monday, 26 February 2018 07:49



[illegible]



[illegible]



[illegible]